# ஏப்ரல் முதல் ஜுன் வரை மஞ்சள் விலை சீராக இருக்கும்

**செ. அனிதா, முனைவர். ந.அஜ்ஜன்**

**தேசிய வேளாண் புதுமைத்திட்டம்-உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம்**
**வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையம்**
**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
**கோயம்புத்தூர்- 641 003**

நறுமணப் பயிர்களில் முக்கியப் பயிரான மஞ்சளின் விலை, நவம்பர் 2010ல் குவிண்டால் ரூ.17,000 ஆக இருந்தது. பின்னர் படிப் படியாகக் குறைந்து செப்டம்பர் 2011ல் குவிண்டால் ரூ.4,600 என்ற நிலையை அடைந்தது. கடந்த இரண்டு மாதமாக மஞ்சளின் விலை ஏறுமுகமாக உள்ளது. இதற்கு முக்கிய காரணம் கையிருப்பு அளவு மற்றும் குறைந்த உற்பத்தியே ஆகும்.

வர்த்தகத் தகவல்களின்படி, இந்தியாவில் தற்போது 37 இலட்சம் மூட்டைகள் இருப்பில் உள்ளன (80 கிலோ). தமிழ்நாட்டில் மட்டும் 14-17 இலட்சம் மூட்டைகள் உள்ளன. 2012-13 ல் இந்தியாவில் மஞ்சள் சாகுபடிப் பரப்பு 20 சதவீதம் குறைந்துள்ளது. மஞ்சள் உற்பத்தியில் முன்னணியில் உள்ள ஆந்திரப் பிரதேசத்தில் 2011-12 ல் 66,000 எக்டராக இருந்த சாகுபடிப் பரப்பு 2012-13 ல் 49,349 எக்டராகக் குறைந்தபோதிலும் உற்பத்தி நன்றாக உள்ளது. தமிழ்நாட்டில் மஞ்சள் சாகுபடிப் பரப்பு 40 சதவீதம் குறைந்ததோடு உற்பத்தியும் மிகக் குறைந்துள்ளது. மஞ்சள் அதிகம் பயிரிடும் ஈரோடு மாவட்டத்தில் மட்டும் 2011-12 ல் 12,664 எக்டராக இருந்த மஞ்சள் சாகுபடிப் பரப்பு 2012-2013 ல் 6,318 எக்டராகக் குறைந்து விட்டது. தேசிய அளவில் இவ்வருட உற்பத்தி 45-50 இலட்சம் மூட்டைகளாக இருக்கும் என கணிக்கப்பட்டுள்ளது.

தற்போது கடந்த ஆண்டைக் காட்டிலும் குறைந்த அளவே சந்தைக்கு மஞ்சள் வரத்து உள்ளது. ஒரிசா, மேற்குவங்காளம் ஆகிய மாநிலங்களிலும் மஞ்சள் பயிரிடப்படுகிறது. ஆனால் இதன் தரம் ஈரோடு மஞ்சளுக்கு ஒப்பிட முடியாது. மேலும் மினிசேலம் என்ற இரகம் மகாராஷ்டிரா மாநிலத்திலிருந்து தமிழ்நாட்டில் ஈரோடு இரகத்தின் விலைக்கு இணையாக விற்கப் படுகின்றது.

நறுமணப் பொருட்கள் வாரியத்தின் தகவலின்படி, 2011-12 ல் மஞ்சள் ஏற்றுமதி 79,500 டன்களாகவும் (2010-11ல் 49,250 டன்கள்) அதன் மதிப்பு ரூ.734.34

கோடியாகவும் (2010-11 ரூ.702.85 கோடி) இருந்தன. ஏற்றுமதி அளவு அதிகரித்து சாகுபடிப் பரப்பு குறைந்த போதிலும், கையிருப்பு அதிகம் உள்ளதால் விலை அதிகரிக்கவில்லை. விவசாயிகள், வா்த்தகா்கள் மற்றும் ஏற்றுமதியாளா்கள் மஞ்சள் விலை நிலைத்திருக்குமா? குறையுமா? அல்லது வரும் மாதங்களில் உயருமா? என்று அறிய ஆா்வமாயுள்ளனா்.

மஞ்சள் விவசாயிகள், விற்பனை மற்றும் சேமிப்பு முடிவுகளை எடுக்க ஏதுவாக, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் உள்ள வேளாண்மை மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தில் இயங்கி வரும் உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம், கடந்த 15 வருடங்களாக ஈரோடு ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் நிலவிய விலைகளை ஆய்வு செய்தது. அவ்வாறே திருப்பதியில் உள்ள ஸ்ரீ வெங்கடேஸ்வரா வேளாண் கல்லூரியில் இயங்கி வரும் வேளாண் சந்தைத் தகவல் மையம், நிஜாமாபாத் சந்தையில் 15 வருடங்களாக நிலவிய மஞ்சள் விலைகளை ஆய்வு செய்தது. ஆய்வு முடிவுகளின்படி தமிழ்நாட்டில் மஞ்சள் விலை மே, ஜுன் 2013 வரை ரூ.7,500,- ரூ.8,500 வரை இருக்கும் அதன் பின் உள்ள விலை ஏற்றங்கள் பருவ மழையைப் பொறுத்தும், மஞ்சள் விதைப்பினைப் பொறுத்தும் முன்னறிவிப்பு செய்யப் படும். எனவே விவசாயிகள் மேற்கூறியவற்றிற்கு ஏற்றாற் போல் தங்கள் இருப்பு , விற்பனை முடிவுகளை எடுக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனா்.

**<u>மேலும் விவரங்களுக்கு தொடா்பு கொள்ளவும் -</u>**

உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம் ,
வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையம்,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூா்-641003.
தொலைபேசி- 0422-2431405